### அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதி வாய்ப்புள்ளோர்க்கு மட்டும் வாய்ப்புக் கிடைப்பதை தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது!

# மருத்துவக் கல்வி முறையை பலவீனப்படுத்தும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டும்!

## ‘நீட்’ தேர்வுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து – மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடிதம்!

**சென்னை, ஜூலை 15-**

**‘நீட்’ தேர்வுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், தமது நன்றியைத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.**

**அக்கடிதத்தில் ராகுல் காந்தி அவர்கள், “மக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதி வாய்ப்புள்ள சிலருக்கு மட்டும் வாய்ப்புக் கிடைப்பதை தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**மேலும் அக்கடிதத்தில் “வலுவான பொது மருத்துவக் கல்வி முறையை பலவீனப் படுத்தும் எந்தவொரு முயற்சியும் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டும்!” என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.**





மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் ‘நீட்’ தேர்வு தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம்பின்வருமாறு:-

ஜூன் 28, 2024 தேதியிட்ட உங்கள் கடிதத்திற்கு நன்றி.

நீட் தேர்வு நமது உயர்கல்வி அமைப்பில் உள்ள அப்பட்டமான குறை பாடுகளை அம்பலப்படுத்தியுள்ளது. தேசிய அளவிலான மையப்படுத்தப்பட்ட தேர்வு முறை விளிம்பு நிலை மாணவர்கள் மீது உண்டாக்கும் பாதிப்பு குறித்தும் இது கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக, ஜூன் 4, 2024 அன்று ‘நீட்’ இளநிலை முடிவுகள் குறித்த தேதிக்கு முன்னரே வெளியான பிறகு, மாணவர்களின் நீதிக்காகக் காங்கிரஸ் கட்சி போராடி வருகிறது. ஒன்றிய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமையின் பெருந்தோல்வியால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கடந்த ஒரு மாதத்தில் சந்தித்தேன். 24 லட்சம் மாணவர்களுக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டும்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது நான் ஆற்றிய உரையும், ‘நீட்’ தேர்வால் ஏழை மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து கவனத்தை ஈர்த்தது. தனியார் பயிற்சி நிறுவனங்களுக்குச்செல்ல முடியாததும் - பிற வசதிவாய்ப்புகள் இல்லாததும் கிராமப்புறத்தில் உள்ள திறமையான மாணவர்கள் சமவாய்ப்புடன் போட்டி போட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது நம்முடைய பொதுக் கல்வி நெறிமுறைகளுக்கு எதிரானது ஆகும்.

> **“பொது மருத்துவக் கல்வி முறையைக் கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டில் வலுவான பொது சுகாதார அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது.”**

மக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதிவாய்ப்புள்ள சிலருக்கு மட்டும் வாய்ப்பு கிடைப்பதைத் தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது. பொது மருத்துவக் கல்வி முறையைக் கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன் விளைவாக வலுவான பொது சுகாதார அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதைப் பலவீனப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டும்.

தங்களின் கடிதத்துக்காக மீண்டும் ஒருமுறை நன்றி. விரைவில் தங்களைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் ராகுல் காந்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஊரகப் பகுதிகளில்

# அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – இன்று கடம்பத்தூர் – கீழச்சேரியில் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை 15 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இன்று (15.9.2022) தொடங்கி வைக்கப்பட்டு, 1,545 பள்ளிகளைச் சேர்ந்த 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.

இத்திட்டத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வரவேற்பினையும், மாணவ மாணவியர் இடையே ஏற்பட்ட எழுச்சியினையும் கருத்தில் கொண்டு 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளையில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் காலை உணவைச் சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வருகிறார்கள்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (15.7.2024) பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில் தொடங்கி வைக்கிறார்கள்.

இத்திட்டத்தின் மூலம் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 குழந்தைகள் பயனடைவார்கள்.

முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உலகிற்கே முன்னோடியான திட்டமாகத் திகழ்கிறது.

இந்த விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட நிர்வாகம் இவ்விழாவிற்கான முன்னேற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

---

### இன்று 148 வது பிறந்த நாள்: தனித்தமிழ் இயக்கத் தந்தை

# மறைமலை அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் மரியாதை!

*சென்னை, ஜூலை 15 -*

*தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் செய்தி வெளியீடு வருமாறு:*

*தமிழகப் புலவர் பெருமக்களுள் மறைத்திரு மறைமலையடிகளார், தனித்தமிழ்த் தந்தையாக மட்டுமின்றித் தனித்திறம் படைத்த பல்கலைப் பேரறிஞராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளில் வல்லுநராகத் திகழ்ந்த அடிகளார் சமயம், சமுதாயச் சீர்திருத்தம் நலத்துறை ஆகிய மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் துறைகளிலும் தமது அறிவாற்றலைச் செலுத்தி அரிய பல நூல்களைத் தனித்தமிழில் எழுதியும் மன்றங்களிலும், மாநாடுகளிலும் அரிய உரைகளை நிகழ்த்திய பண்பாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.*

*தமிழர்கள் அனைவரும் தூயதமிழ் பேச வேண்டும் என்ற நோக்கில் ‘தனித்தமிழ் இயக்கம்’ தொடங்கித் தமிழுக்காக செழும் பணியாற்றியவர் மறைமலையடிகள். பாங்கறிந்து சொற்பொழிவுகள் ஆற்ற வல்லவர், சைவத் திருப்பணியும் சீர்திருத்தப் பணியும் செவ்வனே செய்த செம்மல். ‘தமிழ்க்கடல்’, ‘தனித்தமிழின் தந்தை’ என்றெல்லாம் தமிழுலகத்தால் போற்றப்பட்டவர் மறைமலையடிகள் ஆவார்.*

*தவத்திரு மறைமலையடிகள் 1876ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாள் நாகைப்பட்டினத்தில் பிறந்தார். இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்று மாணவர்களுக்கு எளிய முறையில் பாடம் கற்பித்தவர். திராவிட மஞ்சரி, பாசுகர ஞானோதயம், நீலலோசனி, ஞானசாகரம் ஆகிய இதழ்களில் இவரின் தீஞ்சுவைக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பட்டினப்பாலை, முல்லைப் பாட்டு ஆகிய நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதியும், திருவொற்றியூர் முருக ன் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலிய செய்யுள் நூல்களையும், சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து, சிறுவர்களுக்கான செந்தமிழ், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் போன்ற கட்டுரை நூல்களையும், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் முதலிய புதினங்களையும் எழுதியுள்ளார். வடமொழியில் காளிதாசர் எழுதிய சாகுந்தலத்தை மொழிபெயர்த்து சாகுந்தல நாடகம் என்ற பெயரில் நூலையும், அம்பிகாபதி அமராவதி என்ற நாடக நூலையும் எழுதியுள்ளார்.*

*‘தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகளாரின் 148 ஆவது பிறந்தநாளினை முன்னிட்டு அவரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், பல்லவபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு 15.07.2024 திங்கட்கிழமையன்று காலை 10.30 மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பி னர்கள், தாம்பரம் மாநகராட்சி மேயர், தாம்பரம் மாநகராட்சியின் துணை மேயர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள் ஆகியோரால் மலர் வணக்கம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.*

*இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




---


## சென்னை வடக்கு மாவட்டம் - வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் Dr.கலாநிதி வீராசாமி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் !



மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு

வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் “இந்தியா” கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கழக வேட்பாளர் Dr. கலாநிதி வீராசாமி சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் வட்டம் வாரியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் / நேரம் | நன்றி தெரிவிக்கும் இடங்கள் |
|---|---|
| 15.07.2024<br>திங்கள்கிழமை<br>மாலை 4.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை | **இராயபுரம் மேற்கு பகுதி:**<br>மாலை 4.00 மணி துவக்கம் 48வது வட்டம் துவக்கம் சோலையப்பன் தெரு (இம்பாலா ஓட்டல் அருகில்) இராமனுஜ தெரு M.S. நாயுடு தெரு முத்தையா முதலி தெருT.H.ரோடு பார்த்த சாரதி பிள்ளை தெரு பரசுராமன் தெரு தர்மராஜ கோயில் தெரு ரவுண்டான சீனிவாசபுரம் 1வது தெரு போஜராஜ கோயில் தெரு நாத்வால் ரோடு போலீஸ் கோட்டர்ஸ் P.P.அம்மன் கோயில் தெரு 7வது தெரு லேபர் காலனி பிரதர்ஸ் ஆட்டோ தொட்டி தெரு மீனாட்சி அம்மன்பேட்டை அம்பேத்கார் சிலை முடிவு. |
| | **இராயபுரம் கிழக்கு பகுதி:**<br>51(அ) வட்டம் துவக்கம் அண்ணா சத்திரம் மணிகண்டன் தெரு ஆண்டியப்பன் தெரு வேலாயுத பாண்டி தெரு M.C ரோடு J .P. கோயில் தெரு நரசெய்ய தெரு பெரம்பலூ தெரு சஞ்சீவிராயன் கோயில் தெரு கப்பல் போலு தெரு G.A.ரோடு சிங்கார தோட்டம் கிரேஸ் கார்டன் முத்தமிழ் நகர் காமராஜ் நகர் புதுமனை காசி கார்டன் ஜீவரத்தினம் நகர் மார்க்கெட் பெரிய தம்பி தெரு ஷேக் மேஸ்திரி தெரு GM பேட்டை வெங்கடேசன் தெரு கிழக்கு மாதா கோயில் தெரு P.V. கோயில் தெரு சின்ன தெரு செயின்ட் அனீஸ் பள்ளி அருகில் முடிவு. |

*மேற்கண்ட நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் “இந்தியா” கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.*

**ஆர்.டி.சேகர்,** எம்.எல்.ஏ.
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.